

யாழ், கரணவாய் தெற்கை பிறப்பிடமாகக் கொண்டவரும்
மலேசியாவில் வசித்தவரும், காலஞ்சென்ற மலாயன் பென்சனியர்
உயர்திரு. நாகமுத்து மாணிக்கம் அவர்களின் மனைவியுமான

**திருமதி. பொன்னம்மா மாணிக்கம்** அவர்கள்

சிவபதப்பெறெய்தியமை குறித்த

# நினைவு மலர்

## 13.07.2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புக் காணிக்கை

அன்புக்கு அணிகலனாய்,

பாசத்தின் இருப்பிடமாய்,

பொறுமையின் பொக்கிஷமாய்,

சுமைதாங்கியாய் வாழ்ந்து

எமது இதயத்தில் என்றும் அணையாத்

தீபமாய் சுடர் வீசும், மறைந்தும்

மறையாத எம் அன்புத் தெய்வத்தின்

பாதக் கமலங்களுக்கு

இந் நினைவு மலர்

காணிக்கையாக இருக்கட்டும்.

மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்,

பூட்டப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு" - குறள்"



மண்ணில்
16.02.1916

விண்ணில்
13.06.2004

அமரர்

# திருமதி. பொன்னம்மா மாணிக்கம் அவர்கள்

## திதி வெண்பா

ஆண்டாகும் தாரணத்தில் ஆன வைகாசியதில்
பூண்ட அபரத்துவாதசியே - காண்பரிய
பொற்குணத்து பொன்னம்மா பொங்கரவம் பூண்ட
சிவன் நற்பாதத்தை சேர்ந்திட்ட நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

திருமதி. பொன்னம்மா மாணிக்கம் அவர்கள் திரு. திருமதி. இளையதம்பி கோபாலு–சரஸ்வதி தம்பதியர்க்கு மூத்தமகளாக 16.02.1916ல் பிறந்தார். பெற்றோரால் சீரும் சிறப்புமாக வளர்க்கப்பெற்று தனது பாடசாலை கல்வியில் மிகவும் திறமைமிக்கவராய் விளங்கினார்.

ஆனந்தன் என ஓர் தம்பியாரும் பாக்கியம், பரமேஸ்வரி எனும் இரு இளைய சகோதரிகளும் இவரது உடன் பிறப்புக்களாகும். அன்னார் திரு. நாகமுத்து – வள்ளியம்மை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் மலாயா நாட்டில் அரச தொலைத் தொடர்பு திணைக்களத்தில் உயர் பதவி வகித்து வந்தவருமான நாகமுத்து மாணிக்கம் என்பவரை 1936ம் ஆண்டு திருமணம் செய்து மலாயா நாடு சென்றார்.

இவர்கள் Perak மாநிலத்தைச் சேர்ந்த Maxwell Hills மலைத் தொடருக்கும் Camaran Highlands மலைத் தொடருக்கும் இடைப்பட்ட Taiping என்னும் அழகுறு நந்தவனம் போன்றதொரு ஊரில் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தனர். இவர்கள் மலாய் பாஷையிலும் மிகவும் தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கினார்கள்.

இல்லறம் என்னும் நல்லறத்தில் 1945ம் ஆண்டு ஓர் பெண் மகவை பெற்றெடுத்தனர். இரண்டாவது உலக மகா யுத்தத்தில் பிரித்தானியரின் வெற்றிக்கு பின் இவர் பிறந்தார். இதை அறிந்த இவரது தந்தையாரின் மேலதிகாரி (வெள்ளைக்கார துரை) குழந்தைக்கு வெற்றியை (Victory) குறிக்கும் தொனிப்பொருளில் பெயர் வைக்கும்படி கேட்டுக் கொண்டார். இதற்கமைய மகளுக்கு ஜெயமணி என்னும் பெயரை வைத்தனர்.


இவர் 21 வருடங்கள் அவ்விடம் வாழ்ந்த பின்னர் தனது உற்றார், உறவினருடன் கூடிவாழ ஆசைப்பட்டு, தனது கணவர் மகளுடன் நாடு திரும்பினார். இவர் தனது தாய் தந்தையருக்கு நல்ல மகளாக வாழ்ந்ததுடன், தனது சகோதரர்களுடனும், உற்றார் உறவினர்களுடனும், மிகவும் பாசத்துடனும், அவர்கள் தேவை அறிந்து உதவுபவராகவும், நல்ல துணிச்சல் உள்ளவராகவும், தனது கணவருக்கு நல்ல துணைவியாகவும், யாருக்கும் நேர காலமறிந்து உதவி செய்யக் கூடிய நல்ல மனப்பக்குவத்தை உடையவராகவும், மகளை கண்ணின் மணிபோல் காத்த உயர்ந்த நல்ல தாயாகவும் திகழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் 1968ம் ஆண்டு அவ்வூர் மலாயன் பென்சனியர் திரு. கந்தையா - இலச்சுமி தம்பதிகளின் புத்திரனும் அரசாங்க நில அளவையாளரான திரு. சபாரத்தினம் என்பவரை மகளுக்கு திருமணம் செய்து வைத்தார். அன்னார் பகீரதன், பிரபாஹரன், பரணீதரன், யசோபரன், தர்சினி என முறையே ஐந்து பேரப்பிள்ளைகளை அளவிலா ஆனந்தத்துடன் சீராட்டி, தாலாட்டி, பாராட்டி வளர்த்து வந்தார். அக்காலத்தில் அவரின் கணவர் 1971ம் ஆண்டு காலமானார்.

இவர் மனஉறுதியுடன், மகளுக்கு பக்கபலமாக இருந்து அவரது குடும்பத்திற்கு அயராது உதவி வந்தார். பின்னர் 12 வருடங்கள் வரையில் கொழும்பில் மகளுடனும், பேரப்பிள்ளைகள், இங்குள்ள உறவினர்கள் எல்லாருடனும் அன்போடும் பாசத்தோடும் வாழ்ந்து வந்த காலத்தில், 2004ம் ஆண்டு ஜூன் மாதம் 6ம் திகதி திடீரென சுகயீனமுற்று 13ம் திகதி இரவு 9.25 மணிக்கு இறைவன் திருவடி சேர்ந்தார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி



விநாயகனே வெவ்வினை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்
வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற் பாதமும்
கானப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொலி பெருக்கி
உவப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம் புறந்திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக்குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லை
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
வளப்பருங் கரணங்க ணான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையா னாடுமா னந்த
வெல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமற் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபடு தெய்வத் துதிப்பாடல்

## வெற்றிக்காட்டுப் பிள்ளையார் துதி

காராள ரேரோட்டுங் கழனியயல் சூழக்
கருதுமொரு பலவினைகள் போக்கவெனக் கதறி
ஆரா தனைசெய்யும் அடியார்குழாம் அடிபரவ
அழகுபொழி காவினிலே மேவியருள் சிறக்க
சீரான மாமரங்கள் செறிந்து நிழல் பரப்ப
செப்பரிய அருளருளி சிறந்தொளிர்ந்து மிளிரும்
பேரான வெற்றிகாட்டு விநாயகனே எந்தன்
பிறப்பொழித்துப் பேரின்ப வாரிதனி வாழ்த்துவையே,

நின்னரிய கோயில் விழா நாட்க ளெல்லாம்
நெஞ்சாரப் பக்தியுடன் வணங்கி உண்டி
தன்னையொரு பொழுதுண்டு தவமிருந்தேன்
தவறாதுன் கோயில்வலம் வந்தணைந்தேன்
மன்னுதிரு மக்களைநான் சென்றுபார்த்து
மறுபடியும் வந்துநான் வணங்கிநின்றேன்
என்னரிய வெற்றிகாட்டு விநாயகாவுன்
இணையடியிற் சுகம்பெறவே அருளுவாயே.

## கலட்டிப் பிள்ளையார் துதி

ஊர்விடியும் வேளையிலே உன்காண்டா மணிநாதம்
ஒலித்திடவே கண்விழித்து இறைஞ்சி
சீர்பொலியுஞ் செய்யதிருப் பாதமே கதியென்று
சேவித்தே வாழ்ந்திருந்த என்னை
ஆர்ப்பரிக்கும் ஆடி அமாவாசை காணும் முன்பே
அடியிணையே அழைத்திட்டாய் அற்புதமே
நாற்புறமும் புன்செய்நன் நிலங்கள் சூழ
நாப்பணிலே கோயில்கொண்ட பிள்ளையாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பற்ற முதல்வனாய் ஓங்கார வடிவினிலே
உலகுய்ய அருள்பொழியும் ஆனைமுகா
செப்பரிய கருணைதனின் பதிசிறக்க எழுந்தருளி
செய்தீ வினையறுக்கும் விநாயகனே
தப்பாதுனை வணங்கி அபிஷேகங் கொடுக்கவெனத்
தயாராக ஆவலுடன் இருந்த என்னை
இப்போதே என்பாத நீழலிலே இணைகவென
அழைத்தனையோ அமரகதி அருளுவாயே.

## கரணவாய் அருள்திரு முருகையா துதி

நாற்புறமும் மண்சிறக்கும் கற்பகத்தின் நாப்பணிலே
நங்கைநல்லாள் அம்மையார் ஸ்தாபித்து
ஊற்றெடுக்கும் பக்தியிலே ஊரெல்லாம் சிறப்போங்க
உணர்ந்த மக்கள் ஒருங்கிணைந்தே அமைத்தகோயில்
ஏற்றருளி அருள்பொழியும் எனதுமுரு கையனே
எந்நாளும் உன்னினைவு மறந்தறியேன்
ஆற்றியஎன் பாவமெல்லாம் அழித்தே அருள்சொரிந்து
அமரபதம் அடைந்திடவே அருளுவாயப்பா.

## செல்வச் சந்நிதி - முருகன் துதி

கற்பூரப் புகைநடுவே கசிந்து மனமுருகிக்
கந்தாவென் றோலமிடும் ஒலியெங்கு மதிர
அற்புதமாய் அடியவர்க்கு அழகுமயில் மீதிலமர்ந்து
அருள்பொழியும் அழகுசெல்வச் சந்நிதிவேல் முருகா
பொற்பதமே கதியெனவே போற்றிஎந் நாளுமுன்
புகழ்பாடும் இப்பேதை புரிந்தவினை போக்கியே
நற்பதமே ஈந்தருள்வாய் நான்முகனின் அகந்தையினை
நடித்தலையிற் குட்டியே நலியவைத்த வேலவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னதான மடாலயங்கள் அயலெலா மமைந்து
அடியாரின் பசிப்பிணியை அகற்றிடவே
மன்னுதிரு தொண்டைமான் அகழாற்றங் கரைமேவி
மாசுமிகு பாவப்பிணியைப் போக்கிடவே
நின்னரிய ஞானசக்தி வெற்றிவேல் உருவினிலே
நின்றருளும் செல்வச்சந் நிதிமுருகா!
என்னுடைய பாவம்போக்கி ஈடேற்ற வேண்டியுனை
எந்நாளும் தொழுதுநின்ற ஏழைக்கருளே.

## கருப்பையடி அம்மன் துதி

ஊர்காவற் தெய்வமாய் விளங்கி நின்று
உலவுபிணி நோயகற்றி அருள்சொரிந்த
பேர்பெற்ற பெருங்கருணை கண்டுஊரில்
பெருங்கோயில் எடுத்துரிய விதிமுறையில்
சீர்பெருகப் பூசனைகள் செய்து நின்றோம்
செய்தீ வினையகற்றி ஆட்கொள்வாயே
தார்சூடும் கருப்பையடி அம்மாள்த் தாயே
தஞ்சமம்மா கதியீந்து காத்து அருளே.

## வல்லிபுர ஆழ்வார் துதி

தொல்லைதரும் துட்டர்களின் துடுக்கை யடக்கித்
தொல்லுலகில் அக்கிரமம் அழிந்தொழியப்
பல்வேறு அவதாரம் கொண்டிந்தப் பாரினிலே
பக்தர்களுக் கருள்பொழியும் பரந்தாமா! கோவிந்தா!
அல்லல்தீர்த் தருள்கவென அந்தியத்தில் வந்து
அப்பாஎன் அகங்குளிரக் கண்டேன்
வல்லிபுரந் தனிலமர்ந்து கோயில் கொண்ட
வல்லிபுர ஆழ்வாரே! வைகுந்தம் தந்தருளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழமும் திருக்கேதீச்சரமும்

நத்தார் படைஞானன் பசுவேறின்னனை கவிழ்வாய்
மத்தம் மதயானை யுரிபோர்த்த மணவாளன்
பக்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார் எலும்பணிவான் திருக்கேதீச் சரத்தானே.

## ஈழமும் திருக்கேதீச்சரமும் (செவிவழி வந்தவை)

இன்று ஈழம் என்றால் யாழ்ப்பாணத்தை மட்டும் குறித்துப் பல சர்ச்சைகள் உண்டாகுவதை நாம் அறிவோம். எனக்கு நல்ல ஞாபகம், மூன்றாம் வகுப்புக்கும் ஏழாம் வகுப்புக்கும் இடைப்பட்ட சமூகக்கல்வி நூலில், இலங்கைத் தீவிற்குப் பல பெயர்கள் உண்டு, இரத்தினங்கள் விளைவதால் இரத்தின துபீபம் என்றும், ஆங்கிலேயர் சிலோன் என்றும் சிங்களவர் ஸ்ரீ லங்கா என்றும் அழைக்கின்றார்கள். இலங்கை இயற்கை எழில் மிகுந்தமையால் ஈழமென்று சுத்தத் தமிழால் அழைக்கப்பட்டது.

மறைமலையடிகள் சங்கத் தமிழ் என்ற நூலில் இந்தியாவும் ஈழமும் ஒன்றாகவே ஒருகாலத்தில் இருந்தது எனக் கூறப்படுகிறது. அதாவது பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பு லெமுரியாக் கண்டமென்றும் இந்தியா அழைக்கப்பட்டதாம். இடையில் கடல்கோள் நிகழ்ந்ததாம். அதன் பின்புதான் இலங்கைத் தீவு உண்டானதாம். மிகவும் அழகிய இயற்கை வளமும் எழிலும் மிகுந்து காணப்பட்டதென்றும் கூறப்படுகின்றது.

இலங்கையின் ஆதிவாசிகள் இயக்கர், நாகர் என்று கூறப்படுகின்றது. இயக்கர்வழி வந்தவன் இராவணன். அவன் ஆரியன், தமிழன், சைவன், என்பதை நாம் திருஞான சம்பந்தர் பாடிய முதலாம், இரண்டாம், மூன்றாம் திருமுறைகளிலுள்ள எட்டாம் பாடல்களில் காண்கின்றோம். அதுபோன்று அப்பர் சுவாமிகள் பாடிய நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளிலுள்ள பத்தாம் பாடல்களில் இராவணன் சிவபக்தியுடையவன் என்பதைக் காண்கின்றோம். இதனால் இலங்கை சிவபூமியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் மாந்தை என்று அழைக்கப்படும் மாதோட்டத்தைத் தலைநகராகக் கொண்டு இலங்கையை ஆண்டான் என்பதற்குத் தொல்பொருள் ஆதாரம் காட்டுகின்றது.

இராவணனுடைய காலம் இராமாயண இதிகாச காலம். இக்காலப் பகுதியானது, வேத காலத்தை நெருங்கிய காலமாகும். இக்காலத்தில் திருக்கேதீச்சரம், சிவன் கோயில் என்ற பெயருடன் காணப்பட்டது. தேவர்கள் இந்தச் சிவன் கோவிலை கட்டி விசேட காலமான சிவராத்திரி காலங்களிலும், மார்கழி மாதங்களிலும் வணங்கி வந்தார்களாம். அதனால் இவ்வாலயம் தேவர்களால் கட்டப்பட்டதென்பது உண்மையாகின்றது. இந்த உண்மையை மணிவாசகப் பெருமான் அருளிய திருப்பள்ளியெழுச்சி பத்தாம் பாடலில் காணலாம்.

## திருக்கேதீச்சரம் என்ற பெயர் வந்த காரணம்

வேத காலத்தில் அடிக்கடி தேவர்கட்கும் அசுரர்கட்கும் போர் மூழ்வதுண்டு, பெரும்பாலும் அசுரார்கள் வெற்றியடைவார்கள். தேவர்கள் தோல்வி அடைவதுடன் இறந்து விடுவதுமுண்டு, அதனால் தேவர்கள், என்றும் மூப்பும் இறவாமையும் தருவதாகிய திருப்பாற்கடலிலுள்ள தேவாமிர்தம் உண்ண விரும்பினார்கள். திருப்பாற் கடலைக் கடைய மகாமேருமலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பை நாணாகவும் கொண்டு திருப்பாற் கடலைக் கடைவதற்கு அசுரர்களும் தேவர்களும் ஆயத்தமாகினார்கள். ஒருபக்கம் அசுரரும் மறுபக்கம் தேவர்களுமாய் நின்றார்கள். திருப்பாற்கடலைக் கடைய வேண்டுமெனின் மகாமேருமலை மிகவும் பெரியதாகையில் திருப்பாற்கடலுள் அழுந்தி விடாது கடலின் அடியில் மகாவிஷ்ணு ஆமை வடிவமாகக் கிடந்தார்.

இருபகுதியும் திருபாற்கடலைக் கடைந்தபோது, முதலில் ஆலகால விஷம் எழுந்து தேவர்களைத் துரத்த அவர்கள் முழுமுதற் பொருளாகிய சிவபெருமானைச் சரணாகதி அடைந்தார்கள். சிவபெருமான் மனமிரங்கி அந்த நஞ்சை அப்படியே எடுத்து விழுங்கும்போது, உமாதேவி அந்த நஞ்சு உள்ளே செல்லவிடாது தடுத்தார். அது சிவபெருமானின் கழுத்தில் தடைபட்டு நின்றமையால் "நீலகண்டன்" என்ற நாமமும் சிவபெருமானுக்கு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்பிற்பாடும் தேவர்களும், அசுரர்களும் திருப்பாற் கடலைக் கடையும் போது, குடமுனி (அகத்தியர்) மகாலட்சுமி, காமதேனு என்ற பல பொருட்கள் வந்த பின்னர், தேவாமிர்தம் என்று கூறப்படுகின்ற இறவாஅமிர்தம் வெளியே வந்தது. தேவர்கள், தேவாமிர்தத்திற் பங்கு அசுரர்களுக்குக் கொடுக்க விரும்பவில்லை. இயல்பாகவே அசுரர்களின் குருவாகிய சுக்கிராச்சாரியார், "சிரஞ்சீவி" மந்திரத்தை ஜெபிப்பதால் அசுரர்கள் இறக்க மாட்டார்கள். இறந்தாலும் உயிர்த்துவிடுவார்கள். தேவர்கட்கு அப்படியான வசதியின்மையால் எப்படியாவது அசுரர்களை ஏமாற்ற நினைத்தார்கள்.

இதன்பயனாக மகாவிஷ்ணு மிகமிக அழகிய மோகினி வடிவமாக வந்தார். அசுரர்கள் இயல்பாகவே காம வெறியர்கள். பெண்ணைக் கண்டாற் போதும் எல்லாம் மறந்து விடுவார்கள். இந்த இடத்தில் காம நோய் ஏன் எப்படித் திடீரென உண்டாகின்றது என்பதை அவதானிப்போம். மாமிச வகை, மதுவகை இவ்வாறான உணவு வகைகளாலும், உள்ளி வெங்காயம் இப்படிச் சிலவற்றாலும் காமம் உண்டாகின்றதென அறிவாளர்களும் சாதனையாளர்களும் கூறியுள்ளார்கள்.

அசுரர்கள், மோகினியைக் கண்டு காமவசப்பட்டதும், மோகினி அசுரர்களை நோக்கி, "உங்களுக்கு என்னை வேண்டுமானால் அமிர்தத்தை விடவேண்டுமென்றாள். அசுரர்களும் அவ்வாறே தேவாமிர்தத்தை விட்டு மோகினியை மணப்பதற்காக அடிபட்டு எல்லோரும் இறந்துவிட, ஓர் அசுரன் மட்டும் எஞ்சி ஒழிந்து கொண்டான்.

தேவாமிர்தத்தை மோகினி தேவர்களுக்கு அகப்பையால் அள்ளிப் பிரிக்கத் தொடங்கினாள். தேவர்கள் கைநீட்டித் தத்தம் பங்கைப் பெற்றுக் கொண்டனர். சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் மறைந்து எஞ்சிநின்ற அசுரன் தேவாமிர்தம் கைநீட்டிப் பெற்றதைச், சூரியன் சந்திரன், மோகினிக்குக் கண்சாடை காட்டினார்கள். மோகினி அவ்வசுரனை அகப்பையால் வெட்டு முன் அவன் தான்பெற்ற அமிர்தத்தை உண்டமையால் ராகு, கேது என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபாம்புகளாகித் திருக்கேதீச்சரம் என்று கூறப்படுகின்ற சிவன் கோவிலில் தினமும் பாலாவியில் நீராடி தவிமிருந்து முத்தியடைந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. எனவே **திருக்கேதீச்சர நாதர்** தம்மை வழிபடுவோருக்கு கிரகதோஷங்களை அன்றும் இன்றும் என்றும் நீக்கி வருகின்றார். இந்த உண்மைகளை சம்பந்தர், சுந்தரர் திருக்கேதீச்சரப் பதிகத்தில் வலியுறுத்தியுள்ளார்கள்.


சோழர் காலத்தில் இலங்கையில் நாற்புறமும் மட்டுமன்றி விரல்விட்டு எண்ணக் கூடிய சிவன் கோவில்கள் கிராமங்கள், நகரங்களில் காணப்பட்டாலும் வடக்கே நகுலேச்சரம், கிழக்கில் திருக்கோணேச்சரம் தெற்கில் முன்னேச்சரம் காலி சுந்தரேஸ்வரர் சிவன் கோவில், வடமேற்கு மாந்தையில் திருக்கேதீச்சரம் இருந்தமையால் இலங்கை ஓர் சிவ பூமியாகும். சோழர் காலத்தில் சோழ மன்னர்கள் அனுராதபுரத்தை இராசதானியாக்கி ஆண்ட காலத்தில் மாந்தை துறைமாகக் காணப்பட்டது. அரேபியா போன்ற நாடுகளில் இருந்தும், கடல்கடந்த தேசங்களில் இருந்தும் பலபொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இலங்கையிலிருந்தும், முத்து, இரத்தினம், சங்கு, நெல் முதலியன கப்பல் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டது. அக்காலத்தில் திருக்கேதீச்சரத்தின் நான்கு கோபுரங்களும் அதனைச் சூழ மாடமாளிகைகள், முக்கனிச் சோலைகளும் காணப்பட்டன. பின்பு சிங்களவர் ஆட்சிக்காலத்தில் ஈழமானது யாழ்ப்பாணம் ஓர் இராச்சியமாக வன்னி மாயரட்டை உறுதுணை கோட்டை தனித்தனி இராச்சியங்களாக இருந்தன. இதன் பின்னரே 1505ன் பின் மேலைத்தேச போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆங்கிலேயர் ஆட்சி இலங்கையையும் இந்தியாவையும் அடிமைப்படுத்தி ஆண்ட காலத்தில், ஈழத்தில் தேவாரப் பாடல் பெற்ற திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம், நல்லூர்க் கந்தசுவாமி ஆலயங்கள் போன்ற பல ஆலயங்கள் அழிக்கப்பட்டன. ஈழமாதாவின் இருகண்கள் திருக்கேதீச்சரமும் திருக்கோணமலையும் என்பதை ஈழத்துச் சைவமக்கள் மறந்து விட்டார்களென நினைக்கும்படி இன்று திருக்கேதீச்சரம் காணப்படுவதில் இருந்து அறியக்கிடக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சைவமக்கள் பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலும் காட்டுவது போல் இருந்தமையால்தான், ஆலயங்கள் ஆங்கிலேயரால் அழிக்கப்பட்டதாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் பிரலாபிப்பார். இன்று (2002ல்), அதாவது 1991–2002 வரை திருக்கேதீச்சர ஆலயம் முற்றாக இனப்பிரச்சனை காரணமாக அழிக்கப்படாவிடினும் மடாலயங்கள் முற்றாகச் சேதப்படுத்தப்பட்டது உண்மையாகும். கோயிலைச் சுற்றியுள்ள சிவராத்திரி மடம், திருவாசக மடம், கௌரி மடம் போன்ற பலமடங்கள் தரைமட்டமாக்கப்பட்டதுபோல ஆங்கிலேயர் காலத்திலும் நவமணிகள், நிறைந்த மாடங்கள், மாளிகைகள், மாஞ்சோலை போன்ற முக்கனிச் சோலைகளுடன் ஆலயமும் முற்றாக அழிக்கப்பட்ட வரலாறு கலாநிதி வித்துவான் டீ.யு.சைவப் பெரியார் மு. கந்தையா அவர்கள் எழுதிய திருக்கேதீச்சர மான்மியத்தில் காணப்படுகின்றது.

ஆங்கிலேயரால் அழிக்கப்பட்ட மாதோட்ட திருக்கேதீச்சரத்தின் மகிமையை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானும், ஈழத்துச் சித்தர் வரிசையில் உள்ள சிவயோக சுவாமிகளும், மாந்தையில் தேன்பொந்து உள்ளது என்று அருளினார்கள். இதன்பின் சில சைவப் பெரியார்கள் திருக்கேதீச்சர ஆலயத்தைப் புதுப்பித்தார்கள். மீண்டும் பக்தர்கள் சிவராத்திரியின்போது பாலாவியில் தீர்த்தம் எடுத்துத் தமது தலையிலே வைத்து சிவநாமமாகிய திருவைந்தெழுத்தை நாவினால் ஜெபித்தபடி கொண்டுவந்து மகாலிங்கத்திற்கு அபிடேகம் செய்யும் காட்சி கணகொள்ளாக் காட்சியாகும்.



குறிப்பு : அமரர் பொன்னம்மா மாணிக்கம் அவர்கள் அண்மையில் திருக்கேதீஸ்வரத்திற்கு தலையாத்திரை மேற்கொண்டதை குறிக்கும் முகமாக இத்தலவரலாறு சேர்க்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய

# திருக்கேதீச்சரப் பதிகம்

திருச்சிற்றம்பலம்

பண் – நட்டபாடை

நத்தார்படை ஞானன்பசு வேறிந்தனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமழு வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்றிருக் கேதீச்சரத் தானே.

சுடுவார்பொடி நீறுந்நல துண்டப்பிறைக் கீளும்
சுடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாவுறை கின்றான்திருக் கேதீச்சரத் தானே.

அங்கம்மொழி யன்னாரவ ரமரர்தொழு தேத்த
வங்கம்மலி கின்றகடன் மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்றிருக் கேதீச்சரத் தானே.

கரியகறைக் கண்டன்னல கண்மேலொரு கண்ணான்
வரியசிறை வண்டியாழ்செயு மாதோட்டநன் னகருள்
பரியதிரை யெறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியும்மறை வல்லான்றிருக் கேதீச்சரத் தானே.

அங்கத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் நகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யவினை யாயவ்வடி யார்மேலொழித் தருளி
வையமலி கின்றகடல் மாதோட்டநன் நகரில்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்றிருக் கேதீச்சரத் தானே.

ஊனத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடன் மாதோட்டநன் னகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி நணிந்தான்றிருக் கேதீச்சரத் தானே.

அட்டன்னள காகவ்வரை தன்மேலர வார்த்து
மட்டுண்டுவண் டாலும்பொழின் மாதோட்டநன் னகரில்
பட்டவ்வரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்னமை யாள்வான்றிருக் கேதீச்சரத் தானே.

மூவரென விருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழின் மாதோட்டநன் னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்னெனை யாள்வான்றிருக் கேதீச்சரத் தானே.

கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
சிறையார்பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத் தானை
மறையார்புக ழூரன்னடித் தொண்டன்னுரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு வினையே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகரகவல்



சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வண்ணம ருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்முதச் சுவடும்
இரண்டு செவியு மிலங்குபொன் முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தெ னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தறி வித்து
இருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயி லொருமந் திரத்தால்
ஐம்புலக்கதவை யடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிசை நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழிமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுத நிலையு மாதித்த னியக்கமுங்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தி னீரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தி னுறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக வினிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லாமனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தி என்செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத் தினுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத் தினுள்ளே சிவலிங்கம் காட்டிச்
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணு முற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடும் மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை

வெண்தாமரைக்கு அன்றி நின்பதம் தாங்களன் வெள்ளை உள்ளத்
தண்தாமரைக்குத் தகாது கொலோ சகம் ஏழும்அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான்பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகலகலாவல்லியே!

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்து அருள்வாய் பங்கய ஆசனத்தில்
கூடும் பசும் பொற்கொடியே கனதனக் குன்றும் ஐம்பால்
காடும் சுமக்கும் கரும்பே சகலகலாவல்லியே!

அளிக்கும் செந்தமிழ்த் தெள் அமுது ஆர்ந்து உன்அருட் கடலில்
குளிக்கும்படிக்கு என்று கூடுங் கொலோ உளம் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவல் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே சகலகலாவல்லியே!

தூக்கும் பனுவல் துறை தோய்ந்த கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்து அருள்வாய் வடநூற் கடலும்
தேக்கும் செழுந்தமிழ் செல்வமும் தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே சகலகலாவல்லியே!

பஞ்சப்பு இதம்தரும் செய்ய பொற்பாத பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்து அலராதது என்னே நெடுந்தாள் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்தோன் செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசு ஒத்திருந்தாய் சகலகலாவல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொல் பனுவலும் யான்
எண்ணும் பொழுதுஎளிது எய்தநல்காய் எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும்வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகலகலாவல்லியே!

பாட்டும் பொருளும் பொருளால் பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும் படிநின் கடைக்கண் நல்காய் உளம்கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள் ஓதிமப் பேடே சகலகலாவல்லியே!

சொல்விற் பனமும் அவதானமும் கல்வி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய் நளின ஆசனம் சேர்
செல்விக்கு அரிது என்று ஒருகாலமும் சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே சகலகலாவல்லியே!

சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞானத்தின் தோற்றம் என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலம் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடு அரசு அன்ன(ம்) நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே சகலகலாவல்லியே!

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்ட அளவில் பணியச் செய்வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ சகலகலாவல்லியே!

* - * - *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக வணக்கம்

## சூரியன்

மித்திரா ரவியே மிடியினைத் தீர்ப்பாய்
வித்தகா பாஸ்கரா விரிசுடர் விண்ணவா
சித்தமே நினைத்திடச் செயம் தரு ஸ்ரீதரா
இத்திரை வலம் வரு இந்திரா போற்றியே.

## சந்திரன்

சோமனே சுத்தனே சோர்விலாச் சோதியே
காமனைக் கரித்தவன் கலைமுடி தாங்கிய
நாமனே நகை முகநங்கையின் நாயகா
நேமனே நிறைநல நேசனே போற்றியே.

## செவ்வாய்

மங்களக் குமரனே மணந்தரு சக்தியே
அங்காரகனென்னும் அழகு செவ் வண்ணனே
பொங்கிட நலத்துடன் பொருள் நிலம் அளித்திடும்
எங்களின் இதயனே இன்பனே போற்றியே.

## புதன்

புண்ணியப் புதனே புகலெனப் பணிந்தேன்
கண்முனே கனிந்து நீ கருணையாய் ஒளிவிடு
பண்ணிடும் செயல்களின் பலனெனப் பல்நலம்
மண்ணினில் அருள்வாய் மலரடி போற்றியே.

## குரு

குருவெனும் பிரகஸ்பதி குறைகளைத் தீர்ப்பாய்
திருவொடு நலம்பலத் தினந்தினம் சேர்ப்பாய்
பெருமன வியாழனே பெருந்தவ அந்தணா
நறுமலர்ப் பாதனே நம்பினேன் போற்றியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுக்கிரன்

கலைகளின் தந்தை நீ கண்ணில் ஒளியுநீ
நிலைதரும் வெற்றியின் – நித்தியத் தலைவன் நீ
மலைமகள் அடியவா மலர் தவழ் மார்பனே
தவத் தொளிச் சுக்கிரக சந்ததம் போற்றியே.

## சனீஸ்வரன்

காகத்தின் மீதினில் கருணையாய் வருபவர்
சோகமே தீர்த்துச் சுகமது தருபவர்
மோகமும் மூடமும் மோசமும் தீர்ப்பவர்
வேதனே மந்தனே வேண்டினேன் போற்றியே.

## இராகு

சிம்ஹிகை மைந்தனே சிம்மத்தாள் அடியவா
தம்பதம் பணிபவர் தனித்துணை யானவா
வம்புகள் தீர்த்து வளந்தரு சர்ப்பனே
நம்பினேன் நலந்தரு ராகுவே போற்றியே.

## கேது

செய்தவம் பனித்திடச் செயம்தரு தேவன் நீ
மெய்மினில் மெய்யுநீ மென்மையின் மென்மை நீ
பெய்மழை யெனவருள் பெருகவே பொழிந்திடும்
அய்யனே கேதுவே அரவனே போற்றியே.

## பலன் மொழி

நவநிதி நல்கிடும் நவக்கிரக மாலையைத்
தவத்தோடு நேமமாய் தனித்திருந் துரைத்திடின்
அவத்தோடு வறுமைகள் அழிபசி பிணிகளும்
சிவசிவ மறைந்திடும் செல்வமே நிறைந்திடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துக்க நிவாரண அஷ்டகம்

மங்கள ரூபிணி மதியணி சூலினி மன்மத பாணியளே!
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும் சங்கரி சௌந்தரியே
கங்கண பாணியன் கனிமுகங் கண்டநல் கற்பகக் காமினியே
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்கநிவாரணி காமாக்ஷி!

கானுறு மலரெனக் கதிர்ஒளி காட்டிக் காத்திட வந்திடுவாள்!
தானுறு தவஒளி தாரொளி மதியொளி தாங்கியே வீசிடுவாள்!
மானுறு விழியாள் மாதவர் மொழியாள் மாலைகள் சூடிடுவாள்!
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்கநிவாரணி காமாக்ஷி!

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச் சபையினில் வந்தவளே!
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப் பொருத்திட வந்தவளே!
எங்குலந் தழைத்திட எழில்வடி வுடனே எழுந்தநல் துர்க்கையளே!
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்கநிவாரணி காமாக்ஷி!

தணதண தந்தண தவிலொலி முழங்கிடத் தண்மணி நீ வருவாய்!
கணகண கங்கண கதிர்ஒளி வீசிடக் கண்மணி நீ வருவாய்!
பணபண பம்பண பறையொலி கூவிடப் பண்மணி நீ வருவாய்!
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்கநிவாரணி காமாக்ஷி!

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி பஞ்சநல் பாணியளே!
கொஞ்சிடும் குமாரனைக் குணமிகு வேழனைக் கொடுத்த நல்குமரியளே!
சங்கடம் தீர்த்திடச் சமரது செய்தநற் சத்தியெனும் மாயே!
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்கநிவாரணி காமாக்ஷி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிய படிநீ யருளிட வருவாய் எங்குல தேவியளே!
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப் பல்கிட அருளிடுவாய்!
கண்ணொளி யதனால் கருணையே காட்டிக் கவலைகள் தீர்ப்பவளே!
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்கநிவாரணி காமாக்ஷி!

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை யென்றுநீ சொல்லிவிடு வாய்
சுடர்தரு அமுதச் சுருதிகள் கூறிச் சுகமதைத் தந்திடுவாய்!
படர்தரு இருளின் பரிதியாய் வந்து பழவினை ஓட்டிடுவாய்!
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்கநிவாரணி காமாக்ஷி!

ஜெய ஜெய பாலாசாமுண் டேஸ்வரி ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய துர்க்கா ஸ்ரீ பரமேஸ்வரி ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய ஜெயந்தி மங்களகாளி ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தடிகள் புலம்பல்

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்று
பையலென்றபோதே பரிந்தெடுத்துச் செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி?

முந்தித் தவம் கிடந்து முந்நூறு நாள் சுமந்தே
அந்திப் பகலாய்ச் சிவனை ஆதரித்துத் – தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்?

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள் மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து – முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீ மூட்டுவேன்?

நொந்து சுமந்துபெற்று நோவாமல் ஏந்தி முலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே – அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய்
தனக்கோ மெய்யிலே தீ மூட்டுவேன்?

அரிசியோ நான் இடுவேன், ஆத்தாள் தனக்கு?
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் – உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே என அழைத்த வாய்க்கு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளி இடுவது அரிசியோ? தாய் தலை மேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல்? மெள்ள
முகமேல் முகம் வைத்து முத்தாடி "என்றன்
மகனே" என அழைத்த வாய்க்கு?

முன்னை இட்டதீ முப்புரத்திலே,
பின்னை இட்டதீ தென் இலங்கையில்,
அன்னை இட்டதீ அடிவயிற்றிலே
யானும் இட்டதீ மூள்க! மூள்கவே!

வேகுதே தீயிதனில், வெந்துபொடி சாம்பல்
ஆகுமே பாவியேன் ஐயகோ! மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்தெடுத்த கை.

வெந்தாளோ சோணகிரி வித்தகா! நின்பதத்தில்
வந்தாளோ! என்னை மறந்தாளோ சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்துவரம் கிடந்து என்
தன்னையே ஈன்றெடுத்த தாய்?

வீற்றிருந்தாள் அன்னை, வீதிதனில் இருந்தாள்!
நேற்றிருந்தாள், இன்றுவெந்து நீறானாள், பால் தெளிக்க,
எல்லீரும் வாருங்கள்! ஏதென்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்!

♦♦♦♦◆♦♦♦♦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோளாறு பதிகம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

## திருத்தொண்டர் புராணம்

"தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பம்ஆம்" என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

## திருக்கேதீச்சரப் பதிகம்

திருச்சிற்றம்பலம்

பண் – நட்டபாடை 2ம் திருமுறை

விருது குன்றமா மேருவில் நாணர
வாவனல் எரிஅம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி யெந்நாளும்
கருதுகின்றவூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரம் கைதொழக்
கடுவினைய டையாவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோயிலிலும் திருவீதியிலும் செய்யத்தகாத குற்றங்கள்

1. ஸ்நானம் செய்யாது போதல்
2. தோய்த்துலராத வேட்டி தரித்துக்கொண்டு போதல்
3. கால்கழுவாது போதல்
4. ஆசௌசத்துடன் போதல்
5. தலையில் வஸ்திரம் தரித்துக் கொள்ளுதல்
6. சட்டை இட்டுக்கொள்ளுதல்
7. போர்த்துக் கொள்ளுதல்
8. மேல் வேட்டி போட்டுக்கொள்ளுதல்
9. பாதரக்ஷை இட்டுக்கொள்ளுதல்
10. வாகனமேறிக் கொள்ளுதல்
11. குடை பிடித்துக் கொள்ளுதல்
12. வெற்றிலை பாக்கு உண்ணல்
13. துப்புதல்
14. மலசலங் கழித்தல்
15. மூக்குநீர் சிந்துதல்
16. மயிர்கோதி முடித்தல்
17. சூதாடுதல்
18. சிரித்தல்
19. சண்டையிடுதல்
20. வீண்வார்த்தை பேசுதல்
21. காமப்பற்று வைத்தல்
22. காலை நீட்டிக் கொண்டிருத்தல்
23. சயனித்தல்
24. ஆசனத்திருத்தல்
25. சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் குறுக்கே போதல்
26. சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் இடையிலே நமஸ்காரம் பண்ணுதல்
27. சுவாமிக்குக் காலை நீட்டி நமஸ்காரம் பண்ணுதல்
28. சுவாமிக்குக் காலை நீட்டி அங்கப் பிரதக்ஷிணம் பண்ணுதல்
29. நிரு மாலியத்தை கடத்தல்
30. நிரு மாலியத்தை மிதித்தல்
31. தூபி, துவசத்தம்பம், பலிபீடம், விக்கிரகம் என்னும் இவைகளின் நிழலை மிதித்தல்
32. விக்கிரகத்தைத் தொடுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் குற்றங்களைச் செய்தவர்கள் நரகத்திலே தண்டிக்கப்படுவார்கள் என்று ஆகமங்களும் புராணங்களும் சொல்லுகின்றன. குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொள்வது போலச் சுவாமி தரிசனமாகிய புண்ணியம் செய்யப்போய்ப் பாவத்தைத் தேடிக் கொள்வது புத்தியன்று. எல்லாரும், இந்தக்குற்றங்களை விட்டு, விதிப்படி சுவாமி தரிசனஞ்செய்து, திருவருளைப் பெற்று உய்யக் கடவர்கள்.

இக்காலத்திலே, உத்தியோகஸ்தர்கள் அநேகர் சுவாமி சந்நிதானத்தில் விதிக்கு விரோதமாகச் சட்டையிட்டுக் கொண்டும், போர்த்துக் கொண்டும் மேல்வேட்டி போட்டுக் கொண்டு தலையில் வஸ்திரந்தரித்துக் கொண்டும், பாதரக்ஷை இட்டுக்கொண்டும், குடைப்பிடித்துக்கொண்டும், போகிறார்கள், அவர்கள், தங்கள் சமயத்தில் உடையவர்களானால், இப்படிச் செய்வார்களா?

முனிஸ்வரம் சி. பத்மநாதன் ஐயரின் பதிப்பீட்டின் தொகுப்பு.

## செய்ய வேண்டியன:

1. இறைவனை வணங்குக.
2. இனிமையாகப் பேசுக.
3. உண்மையே பேசுக.
4. அன்பாகப் பேசுக.
5. நன்மையே பேசுக.
6. மெதுவாகப் பேசுக.
7. சிந்தித்துப் பேசுக.
8. சபையறிந்து பேசுக.
9. சமயமறிந்து பேசுக.
10. பேசாதிருந்தும் பழகுக.
11. சொல்வதையே செய்க.
12. சோம்பலை அகற்றுக.
13. கோபத்தை நீக்குக.
14. யோசித்துச் செய்க.
15. செருக்கை அடக்குக.
16. உயர்வையே எண்ணுக.

## கொள்ள வேண்டியன

1. ஏழ்மையில் நேர்மை.
2. தோல்வியில் விடாமுயற்சி.
3. துன்பத்தில் துணிவு.
4. செல்வத்தில் தியாகம்.
5. பதவியில் பணிவு.
6. கோபத்தில் பொறுமை.
7. அன்பில் தூய்மை.
8. அடக்கத்தில் எளிமை.
9. உழைப்பில் விருப்பம்.
10. பேச்சில் சிக்கனம்.
11. கல்வியில் ஆர்வம்.
12. கடமையில் பற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல் !



காலஞ்சென்ற எமது குலதெய்வம்

**திருமதி. மாணிக்கம் பொன்னம்மா**

அவர்களின் ஈமக் கிரியைகளின் போது
நேரில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தோருக்கும்
உள்ளூர், வெளியூரிலிருந்து
அனுதாபச் செய்தி அனுப்பியோர்களுக்கும்,
தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோர்க்கும்,
ஈமச்சடங்கை நடத்திய குருமாருக்கும்,
ஈமச்சடங்கை சிறப்பாக நடாத்த உதவி செய்தோருக்கும்,
ஈமக்கிரியை மற்றும் வீட்டு கிருத்தியத்தில்
கலந்து கொண்டவர்களுக்கும்,
எமது அன்னை வைத்தியசாலையில்
அனுமதிக்கப்பட்டிருந்த போது சிரமம் பாராது
எமக்கு உறுதுணையாக இருந்தவர்களுக்கும்,
இந்நூலை திறம்பட அச்சேற்றியவர்களுக்கும்,
எமது அன்னை பிறந்த மண்ணான கருணையூரில்
நடைபெற்ற வைபவத்தில் பங்கு கொண்டு
அன்னாரை நினைவு கூர்ந்தவர்களுக்கும்,
இன்று நடைபெறுகின்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில்
கலந்து கொண்டவர்களுக்கும்
எமது பணிவான நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கிறோம்.

**இப்படிக்கு**


**மகள், மருமகன், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்**

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.

எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது
வேறொருவருடையதாகும்.



"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"

- பகவான் ஸ்ரீ கிருஸ்ணர்

"MAYOORI" Tel : 2440501 Fax : 2434157

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org